Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ்Mirror www.tamilmirror.lk

WEDNESDAY, JULY 27 2025

புதன்கிழமை 27, ஓகஸ்ட் 2025 | ஒளி: 11 கதிர் 037 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ FREE

ஸூம் தொழில்நுட்பத்தில் வழக்கு விசாரணை:

# ரணிலுக்கு சரீர பிணை



அரச நிதியை முறைகேடாக பயன்படுத்தியமை தொடர்பில், குற்றப்புலனாய்வு பிரிவினரால் வெள்ளிக்கிழமை (22) அன்று கைது செய்யப்பட்ட இலங்கையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட எட்டாவது ஜனாதிபதியாக இருந்த ரணில் விக்ரமசிங்க, கோட்டை நீதவான் நீதிமன்றத்தால், செவ்வாய்க்கிழமை(26) அன்று சரீர பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

கொழும்பு தேசிய மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, ஸூம் தொழிற்நுட்பத்தின் ஊடாக, வழக்கு விசாரணையில் பங்கேற்றிருந்தார்.

தொடர்ச்சி P2




## "சர்வதேச நீதி வேண்டும்"

■ சண்முகம் தவசீலன்

தமிழ் மக்கள் சர்வதேச நீதியைத் தான் கோருகிறார்கள்! ஒரு போதும் உள்ளூர் பொறிமுறையை ஏற்றுக் கொள்ளவில்லை என்பதை வலியுறுத்தி சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தில் வடக்கு, கிழக்கு பகுதிகளில் இடம்பெறவுள்ள பெரும் போராட்டத்திற்கு அனைவரும் ஆதரவு வழங்குமாறு முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத் தலைவர் சுப்பிரமணியம் பரமானந்தம் கோரிக்கை விடுத்துள்ளார்.

சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினமான எதிர்வரும் 30ஆம் திகதி சர்வதேச நீதியை கோரி வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தினரால் வடக்கில் யாழ்ப்பாணம் கிட்டுப் பூங்காவில் இருந்து செம்மணி வரையும் கிழக்கில் கல்லடி பாலத்தில் இருந்து காந்தி பூங்கா வரையும் மாபெரும் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று

தொடர்ச்சி P2



## "அனுர கோ ஹோம்"

கொழும்பு நீதவான் நீதிமன்றத்திற்கு அருகிலுள்ள கியூ வீதியில் செவ்யாக்கிழமை (26) அன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள், "அனுர கோ ஹோம்" தொடங்கி விட்டது என்றனர்.

கூட்டத்தினரிடையே உரையாற்றிய ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கவிந்த ஜெயவர்தன, அரசாங்கத்திற்கு எதிரான எதிர்க்கட்சிகளின் கூட்டுப் போராட்டம் இப்போது தொடங்கிவிட்டது என்று கூறினார். இந்த அடக்குமுறை ஊர்வலத்திற்கு அதிக ஆயுள் இல்லை என்றும் கவிந்த ஜெயவர்தன குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2




## "கருணாவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுங்கள்"

■ பாறுக் ஷிஹான்

கருணா அம்மான் மீது சட்ட நடவடிக்கை எடுங்கள். விசேடமாக பிள்ளையான இனிய பாரதி குழுக்களுடன் இயங்கியவர்கள் இன்று கூட கல்முனை பகுதியில் தற்போது சுதந்தி ரமாக நடமாடிக் கொண்டிருக்கிறார்கள் அவர்கள் தொடர்பான சாட்சியங்களையும் குற்றப் புலனாய்வு பிரிவு பதிவு செய்ய வேண்டும் என மனித உரிமை செயற்பாட்டாளர் தாமோதரம் பிரதீவன் தெரிவித்தார். கல்முனை ஊடக மையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதில் அளிக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார் .

தொடர்ச்சி P2

## "எதற்கும் தயார்"

கோட்டை நீதவான் நீதிமன்றத்திற்கு செவ்வாய்க்கிழமை (26) அன்று வந்த இலங்கை பொதுஜன பெரமுன (SLPP) பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, தானும் எதிர்க்கட்சியில் உள்ள மற்றவர்களும் எதையும் எதிர்கொள்ளத் தயாராக இருப்பதாகக் கூறினார்.

"ஜே.வி.பி. தலைமையிலான என்.பி.பி. அரசாங்கம் திடீரென்று ஒரு உயரடுக்கு மனநிலையை ஏற்றுக்கொண்டதால், நாங்கள் எதற்கும் தயாராக இருக்கிறோம்," என்றும் அவர் ஊடகவியலாளர்களிடம் கூறினார்.



முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு ஆதரவாக, ஐக்கிய மக்கள் சக்தி (SJB) உட்பட ஏராளமான பாராளுமன்ற உறுப்பினர்கள் கோட்டை நீதவான் நீதிமன்றங்களுக்கு அருகில் கூடியுள்ளனர்.

## போத்தல் வீச்சில் பொலிஸ்காரர் காயம்

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு எதிரான வழக்கு, கோட்டை நீதவான் நீதிமன்றத்தில், ரணிலின்றி 'ஸூம்' தொழில்நுட்பம் ஊடாக விசாரணைக்கு செவ்வாய்க்கிழமை (26) அன்று உட்படுத்தப்பட்டது.

இதேவேளையில், கோட்டை நீதவான் நீதிமன்றத்துக்கு வெளியே,



எதிர்க்கட்சியினரால் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தொடர்ச்சி P2

வடக்கு, கிழக்கில் மீள்குடியேற்ற

## "வீடுத் திட்டங்களை இவ்வாண்டு நிறைவு செய்யலாம்"

வடக்கு மற்றும் கிழக்கில் மீள்குடியேற்றம் தொடர்பான வீட்டுத் திட்டங்களை இந்த ஆண்டு நிறைவு செய்ய முடியும் என்று அதிகாரிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

2025ஆம் ஆண்டு நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சிற்கு ஒதுக்கப்பட்ட வரவு செலவுத்

தொடர்ச்சி P2



## "ஒருபோதும் அஞ்சோம்"

அச்சுறுத்தல்கள் மற்றும் அடக்குமுறைகள் மூலம் எதிர்க்கட்சியை அழிக்க ஏராளமான திட்டங்கள் நடந்து வருகின்றன. இந்த அச்சுறுத்தல்கள் அடக்குமுறைகள் பயமுறுத்தல்களுக்கு நாம் ஒருபோதும் அஞ்சப்போவதில்லை. எந்தவொரு சவாலையும் எதிர்கொண்டு ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் நோக்கத்துடன், ஜனநாயகத்தை இல்லாதொழிக்க எடுக்கும்



சகல முயற்சிகளையும் முறியடிக்க மக்களுடன் ஒன்றிணைந்து வலுவான தலைமைத்துவத்தையும் வழிகாட்டுதலையும் பெற்றுத் தருவோம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## இனிய பாரதியின் சகா விடுவிப்பு

■ கனகராசா சரவணன்

சி.ஐ.டியினரால் திங்கட்கிழமை (25) அன்று கைது செய்யப்பட்ட இனிய பாரதியின் சகாவான மட்டு களுவங்கேணியைச் சேர்ந்த பாலசுந்தரம் என்பவரை சுமார் 7 மணித்தியால விசாரணையின் பின்னர் சிஐடியினர் விடுதலை செய்துள்ளதாக கைது செய்யப்பட்டவரின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

இனிய பாரதியின் சகாவாக செயற்பட்டிருந்த குறித்த நபரை சம்பவ தினத்தன்று களுவங்கேணியிலுள்ள அவரது வீட்டில் வைத்து கொழும்பில் இருந்து சென்ற சிஐடி யினர் கைது செய்தனர் இதனையடுத்து, அவரை கொண்டு சென்று சுமார் 7 மணித்தியால தொடர் விசாரணையின் பின்னர் இரவு 9.00 மணிக்கு விடுவித்துள்ளனர்.

## நீதிமன்ற வளாகத்தில் எதிர்க்கட்சினர் ஆர்ப்பாட்டம்

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவாக செவ்வாய்க்கிழமை(26) அன்று எதிர்க்கட்சியினர் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

'அடக்குமுறைக்கு எதிராக' என்ற தொனிப்பொருளிலேயே இப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கோட்டை நீதவான் நீதிமன்ற வளாகத்துக்கு செல்லும் வீதி பாதுகாப்பு படையினரால் மூடப்பட்டது.

குறைந்தளவு மக்கள் மட்டுமே அந்த வீதியில் செல்ல அனுமதிக்கப்படுகின்றனர்.

போராட்டக்காரர்கள் பொலிஸாரின் வீதித் தடையை உடைத்து நீதிமன்ற வளாகத்தின் நுழைவாயிலான பராக் மாவத்தை நோக்கி நுழைய முயற்சித்துள்ளனர்.

இதற்கிடையில் பொலிஸ் சிறப்புப் படை அதிகாரிகள் மிகவும் எச்சரிக்கையாக இருப்பதாக கூறப்படுகிறது.

கேமரா அடங்கிய வாகனமும் களத்தில்

இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் பாதுகாப்பு கேமரா அடங்கிய வாகனம், கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்ற வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. அத்துடன், அந்த வளாகத்தில் சுமார் 200 மீற்றர் சுற்றுவட்டாரத்தில், ஆயுதம் ஏந்திய பொலிஸார், பாதுகாப்பு படையினர் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

## ஸூம் தொழில்நுட்பத்தில் வழக்கு விசாரணை:

# ரணிலுக்கு சரீர பிணை

ரணில் விக்ரமசிங்க, ஜனாதிபதியாக பதவிவகித்த காலத்தில், 2023 செப்டெம்பர் 13ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரை, கியூபா மற்றும் அமெரிக்காவுக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டிருந்தார். அதன் பின்னர் இங்கிலாந்தில் உள்ள வுப்ஹாம்படன் பல்கலைக்கழகத்தில் 22ஆம் திகதி நடைபெற்ற நடந்த பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்டுள்ளார். திருமதி விக்ரமசிக்க கௌரவப்பட்டம் பெறும் விழாவிலேயே கலந்துகொண்டுள்ளார்.

இந்த விஜயத்தில் ஜனாதிபதி செயலக அதிகாரிகள் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் உட்பட 10 பேர் கலந்துகொண்டுள்ளனர். இந்த இரண்டு நாட்களிலும் அவர் தனிப்பட்ட விஜயத்தையே முன்னெடுத்திருந்தார். இதற்காக மொத்தமாக 166 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. இந்த செலவுத் தொகையில், ஜனாதிபதி செயலகம் 133 இலட்சம் ரூபாயையும் பொலிஸ் மற்றும் கடற்படை 33 இலட்சம் ரூபாயையும் செலுத்தியுள்ளன.

இந்த குற்றச்சாட்டு தொடர்பில், வெள்ளிக்கிழமை (22) அன்று கைது செய்யப்பட்ட முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை, ஒகஸ்ட் 26ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

கைவிலங்கு இன்றி நீதிமன்றத்துக்கு அழைத்துவரப்பட்ட முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, விளக்கமறியல் உத்தரவுக்கு பின்னர் கைவிலங்கிடப்பட்டு, சிறைச்சாலை பஸ்ஸில் ஏற்றபட்டு, புதிய மகசின் சிறைச்சாலைக்கு கொண்டுசெல்லப்பட்டார். எனினும், ரணிலின் உடல்நிலை மோசமாக இருந்தமையால், சிறைச்சாலை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

எனினும், ரணில் விக்ரமசிங்கவின் உடல்நிலையை கருத்தில் கொண்டு, கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவுக்கு சனிக்கிழமை (23) பிற்பகல் மாற்றப்பட்டார். அவருக்கு அவசர சிகிச்சைப் பிரிவில் தொடர்ந்தும் சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது. சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ், தனது வாய்மொழி சமர்ப்பிப்புகளை முன்வைத்தார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை பிணையில் விடுவிக்கும் விதிவிலக்கான சூழ்நிலைகளை பிரதிவாதி தரப்பு முன்வைக்காவிட்டால், விசாரணை முடியும் வரை அவரை விளக்கமறியலில் வைக்க வேண்டும் என்று நீதிமன்றத்தில் கோரிநின்றார்.

சந்தேகத்திற்குரிய முன்னாள் ஜனாதிபதி, ஜூம் தொழில்நுட்பம் மூலம் பிரசன்னமாய் இருந்தார். குற்றப் புலனாய்வுத் துறை மற்றும் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்காக ஆஜரான வழக்கறிஞர்கள் முன்வைத்த உண்மைகளை கருத்தில் கொண்ட கொழும்பு கோட்டை நீதவான் நிலுபுலி லங்காபுர, சந்தேக நபரை தலா 5 மில்லியன் ரூபாய் மதிப்புள்ள மூன்று சரீர பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

மேலும் நீதவான் விசாரணை ஒக்டோபர் 29ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

## “சர்வதேச நீதி வேண்டும்”

முன்னெடுக்கப்படவுள்ளது

இது தொடர்பில் முல்லைத்தீவு ஊடக அமையத்தில் செவ்வாய்க்கிழமை (26) காலை முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் ஊடக சந்திப்பு ஒன்றை நடத்தி குறித்த போராட்டத்திற்கு அனைத்து தரப்பினரின் ஆதரவையும் வேண்டி நிற்பதாக தெரிவித்தனர்

இங்கு கருத்து தெரிவித்த முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்க தலைவர் சுப்பிரமணியம் பரமானந்தம், “ தமிழ் மக்கள் சர்வதேச நீதியைத் தான் கோருகிறார்கள். ஒரு போதும் உள்ளூர் பொறிமுறையை ஏற்றுக் கொள்ளவில்லை என்பதை வலியுறுத்தி, சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தில் முன்னெடுக்கப்படும் இந்த மாபெரும் போராட்டங்களில் மதத் தலைவர்கள், அரசியல் பிரதிநிதிகள், பல்கலைக்கழக மாணவர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், சிவில் சமூக பிரதிநிதிகள், மீனவ அமைப்புகளின், பிரதிநிதிகள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரையும் பொதுமக்களையும் தங்களது போராட்டத்திற்கு ஆதரவு வழங்கி சர்வதேச நீதியூடாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தங்களுடைய உறவுகளுக்கு நீதி கிடைக்க வழி சேர்க்குமாறு கோரிக்கை விடுத்தார்.”

## போத்தல் வீச்சில் பொலிஸ்காரர் காயம்

கோட்டை நீதவான் நீதிமன்றத்திற்கு அருகில் பணியில் இருந்த ஒரு பொலிஸ்காரர், ஒரு போராட்டக்காரர் வீசிய போத்தல் தாக்கியதில் காயமடைந்தார்.

நேரில் கண்ட சாட்சிகளின் கூற்றுப்படி, போத்தல், ஒரு யூடியூபரை குறிவைத்து வீசப்பட்டது, ஆனால், பொலிஸ்காரர் பின்னால் இருந்தபோது அவர் மீது பட்டுள்ளது.



## “ஒருபோதும் அஞ்சோம்”

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை செவ்வாய்க்கிழமை (26) சந்தித்து நலம் விசாரித்த பின்னர், ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

குடிமக்களாக நமக்கு ஜனநாயக உரிமைகள், பேச்சுச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் மற்றும் அரசியலில் ஈடுபடும் சுதந்திரம் என்பன காணப்படுகின்றன. இந்த அச்சுறுத்தும் நடவடிக்கைகளை எதிர்த்து உறுதியாக நின்று, நாட்டிற்காக நல்லதொரு நோக்கத்திற்காக அனைவரும் அணிதிரளுமாறு நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்க எதிர்க்கட்சி பூரண ஆதரவைப் பெற்றுத் தரும்.

அவ்வாறே, அடக்குமுறை, அச்சுறுத்தல்களுக்கு எதிராகவும், ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காகவும் நாம் அணிதிரள்வோம். இதற்குத் தேவையான தலைமைத்துவத்தை வழங்குவோம். சட்டத்தை மதித்து, நீதியை நிலைநாட்டும் செயற்பாட்டை பாதுகாத்து, நீதிமன்ற சுதந்திரத்திற்காக வேண்டி நாம் முன்நிற்போம். அடக்குமுறை அச்சுறுத்தல்கள் மூலம் அரசாங்கம் தனது எதிரிகளை வேட்டையாடும் முயற்சிக்கு நாம் இடமளியோம். நாட்டு மக்களே அரசாங்கங்கள் வருவதையும் போவதையும் தீர்மானிப்பவர்கள். இன்று வேலையில்லாப் போக்கு அதிகரித்துள்ளது. மக்கள் படும் துயரங்களுக்கு மத்தியில் நாம் எதிர்க்கட்சியாக இருந்தாலும், அரசாங்கம் குறித்து திருப்திப்பட முடியாது என்று எதிர்க்கட்சித் தலைவர் இங்கு மேலும் சுட்டிக்காட்டினார்.

## நீதிமன்ற வளாகத்தில்...

கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்ற வளாகத்தில் மட்டுமன்றி, கொழும்பு தேசிய வைத்தியசாலை மற்றும் ஜனாதிபதி செயலகம் உள்ளிட்ட கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

300 சட்டத்தரணிகள் களத்தில்

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மீதான நீதிமன்ற விசாரணையின் போது, சட்டத்தரணிகளான திலக் மாரப்பன, அனுஜா பிரேமரத்ன, உப்புல் ஜெயசூரியா, அலி சப்ரி மற்றும் வழக்கறிஞர்கள் ரணில் விக்ரமசிங்கவுக்காக ஆஜராகின்றனர். மேற்படி சட்டத்தணிகளுடன், சுமார் 300க்கும் மேற்பட்ட சட்டத்தரணிகளும் நீதிமன்றத்தில் பிரசன்னமாய் உள்ளனர்.

> **கோட்டை நீதவான் நீதிமன்ற வளாகத்திலும் பொதுமக்கள் வந்து கூடிக்கொண்டிருந்தனர். இந்நிலையில், ஏதாவது அசாதாரண நிலை ஏற்படுமாயின், அதனை தடுப்பதற்காக பொலிஸ் நீர்த்தாரை பிரயோக வாகனம் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தது.**

நீர்தாரை இயந்திரம் தயார்

கோட்டை நீதவான் நீதிமன்ற வளாகத்திலும் பொதுமக்கள் வந்து கூடிக்கொண்டிருந்தனர். இந்நிலையில், ஏதாவது அசாதாரண நிலை ஏற்படுமாயின், அதனை தடுப்பதற்காக பொலிஸ் நீர்த்தாரை பிரயோக வாகனம் தயார் நிலையில், வைக்கப்பட்டிருந்தது.

களத்தில் குதித்தார் “ட்ராமா மாமா”

கோட்டை நீதவான் நீதிமன்றத்துக்கு வெளியே, எதிர்க்கட்சியினரால் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. இதில், ஐக்கிய தேசியக் கட்சியின் மிகவும் விசுவாசமான நபரான “ட்ராமா மாமா”வும் பங்கேற்றனர்.

போக்குவரத்து நெரிசல்

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவாக செவ்வாய்க்கிழமை (26) அன்று எதிர்க்கட்சியினர் நடத்திய ஆர்ப்பாட்டம் காரணமாக கொழும்பில் பல வீதிகளில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

அதன்படி, கொழும்பு கோட்டையிலிருந்து லேக் ஹவுஸ் சுற்றுவட்டம் மற்றும் கொம்பனி வீதி வரையிலான பல வீதிகளில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.



## “வீடுத் திட்டங்களை...

திட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள் குறித்த மீளாய்வு மற்றும் 2026ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்ட பூர்வாங்க கலந்துரையாடல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தலைமையில் திங்கட்கிழமை (25) காலை நடைபெற்றது.

இந்த ஆண்டு தொடங்கப்பட்ட திட்டங்கள் இந்த ஆண்டிலேயே குறிப்பிட்ட இலக்குகளை நோக்கி முன்னெடுக்க வேண்டுமென ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க இதன்போது வலியுறுத்தியுள்ளார்.

நகர மற்றும் கிராமிய வீடமைப்பு நிர்மாணத் திட்டங்கள், நகர அபிவிருத்தித் திட்டங்கள், நகர திட்டமிடல் திட்டங்கள், கழிவு முகாமைத்துவம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்புத் திட்டங்கள், நீர் வழங்கல் மற்றும் சுகாதாரத் திட்டங்கள் போன்ற துறைகள் குறித்து இங்கு கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன. இந்தத் துறைகளுடன் தொடர்புடைய நாட்டின் ஒவ்வொரு மாகாணத்திலும் செயல்படுத்தப்படும் திட்டங்களின் தற்போதைய முன்னேற்றம் குறித்து மீளாய்வு செய்யப்பட்டது. குறிப்பாக, கடந்த கால பொருளாதார நெருக்கடி காரணமாக நிறுத்தப்பட்ட திட்டங்களை மீண்டும் தொடங்குவதிலும், தொடங்கப்பட்ட திட்டங்களை தொடர்ந்து முன்னெடுப்பதில் எழுந்துள்ள சிக்கல்கள் குறித்து கவனம் செலுத்தப்பட்டது. இந்த ஆண்டு தொடங்கப்பட்ட திட்டங்களை இந்த ஆண்டு குறிப்பிட்ட இலக்குகளை நோக்கி வழிநடத்த வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி வலியுறுத்தினார். அரசாங்கம் சம்பந்தப்பட்ட அமைச்சுக்களுக்கு முறையாக நிதி ஒதுக்கியிருந்தாலும், அவை ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் முறையாகப் பயன்படுத்தப்படாவிட்டால் அது ஒரு பிரச்சினையே என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

வீடுகள் மற்றும் கட்டிடங்களை நிர்மாணிப்பதிலும், நகர திட்டமிடலிலும் சம்பந்தப்பட்ட பகுதி மக்களின் கருத்துகள் மற்றும் தேவைகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, முந்தைய அரசாங்கங்களால் தங்கள் சொந்த விருப்பப்படி மேற்கொள்ளப்பட்ட நிர்மாணங்கள் காரணமாக, நாட்டின் பல்வேறு பகுதிகளில் பயன்படுத்தப்படாத மற்றும் குறைந்த பயன்பாடுள்ள அரசாங்க கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன என்று தெரிவித்தார்.

கடந்த காலங்களில் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழ் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் தொடங்கப்பட்ட 18 பாலம் நிர்மாணிக்கும் திட்டங்கள் பாதியிலேயே கைவிடப்பட்டுள்ளதாகவும், அந்தக் நிர்மாணப் பணிகள் காரணமாக தற்காலிகமாக பயன்படுத்தப்பட்ட வீதிகள் சதுப்பு நிலங்கள் போல, மாறியுள்ளதால் அப்பகுதி மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இங்கு தெரிவிக்கப்பட்டது. அந்தத் திட்டங்களுடன் தொடர்புடைய நிர்மாணங்களை பூர்த்தி செய்வதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயுமாறு அதிகாரிகளுக்கு ஜனாதிபதி அறிவுறுத்தினார்.

குறிப்பாக, சீன மற்றும் இந்திய கடன் உதவியின் கீழ் செயல்படுத்தப்படும் வீட்டுத் திட்டங்களின் தற்போதைய நிலை குறித்து இங்கு ஆராயப்பட்டது. வடக்கு மற்றும் கிழக்கில் மீள்குடியேற்றம் தொடர்பான வீட்டுத் திட்டங்களை இந்த ஆண்டு நிறைவு செய்ய முடியும் என்று அதிகாரிகள் நம்பிக்கை தெரிவித்தனர்.

தற்பொழுது முன்னெடுக்கப்பட்டு வரும் ‘ஹோமாகம டெக்சிட்டி’ திட்டத்துடன் தொடர்புள்ள வீதி அபிவிருத்தித் திட்டங்கள், ‘பொலன்னறுவை நிர்வாக வளாகம்’ மற்றும் ‘சிட்டி பிராண்டிங் திட்டம்’ ஆகியவற்றின் தற்போதைய நிலைமை குறித்தும் இங்கு ஆராயப்பட்டது.

நகர்ப்புற மக்களுக்கு தற்போது வழங்கப்பட்டுள்ள அடுக்குமாடி வீட்டுத் திட்டங்களை அவர்களுக்கு ஒப்படைப்பதில் எழுந்துள்ள பிரச்சினைகள் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது. சேதமடைந்த வீடுகளை அவர்களிடம் ஒப்படைப்பதற்குப் பதிலாக அவற்றை புதுப்பித்து வழங்குவதன் முக்கியத்துவத்தையும், அவை வழங்கப்பட்டவுடன் அவற்றைப் பராமரிப்பதற்கான முறையான பொறிமுறையை வகுக்க வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

அரை நகர்ப்புறங்களில் அடுக்குமாடி வீட்டுத் திட்டங்களுக்கான அந்தப் பகுதி மக்களின் தேவை மற்றும் விருப்பத்தைக் கண்டறிய ஒரு கணக்கெடுப்பை நடத்துவதன் முக்கியத்துவத்தையும் ஜனாதிபதி விளக்கினார்.

காணி கையகப்படுத்துதல் தொடர்பான கொடுப்பனவுச் செயல்முறைகளில் எழுந்துள்ள சட்ட சிக்கல்கள் குறித்து அதிகாரிகள் ஜனாதிபதியிடம் தெரிவித்தனர். அந்தப் பிரச்சினைகளுக்கான தீர்வுகளுக்கான முன்மொழிவுகளைத் தயாரிக்குமாறு ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க அவர்களுக்கு அறிவுறுத்தினார். அரசாங்க வீட்டுத் திட்டங்களில் ஊடாக தற்போது பயன் பெறாத, ஆனால், பயனடைய வேண்டிய மக்களுக்காக அரசாங்க தலையீட்டுடனான ஒரு பொறிமுறையொன்று குறித்தும் இதன் போது ஆராயப்பட்டது. இது குறித்து வங்கிகளுடன் கலந்துரையாடி அரசாங்க பங்களிப்புடன் ஒரு பொறிமுறையை உருவாக்குவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயுமாறு ஜனாதிபதி அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

கழிவு முகாமைத்துவம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு திட்டங்கள் குறித்தும் ஆராயப்பட்டது. வேரஸ் நதித் திட்டம்,கொலன்னாவ மழைநீர் திட்டம் உள்ளிட்ட வெள்ளம் மற்றும் அனர்த்தங்களைத் தடுக்க நாட்டின் பல்வேறு பகுதிகளில் செயல்படுத்தப்படும் திட்டங்களின் தற்போதைய நிலை குறித்தும் மீளாய்வு செய்யப்பட்டன.

இந்தத் திட்டங்கள் ‘கிளீன் ஸ்ரீலங்கா’ திட்டத்தின் ஆதரவுடன் செயல்படுத்தப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். வெள்ளம் உள்ளிட்ட அவசர நிலைகளைச் சமாளிப்பதற்கான முன்கூட்டிய திட்டங்கள் குறித்தும் இதன்போது ஆராயப்பட்டது. நீர் வழங்கல் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு திட்டங்களின் கீழ் யாழ்ப்பாணம், கொழும்பு, கண்டி, அநுராதபுரம் மற்றும் களுத்துறை போன்ற பகுதிகளில் செயல்படுத்தப்படும் திட்டங்களும் இங்கு ஆராயப்பட்டன.

முந்தைய அரசாங்கங்களின் கீழ் நீர் வழங்கல் கொள்ளளவை அதிகரிப்பதற்காக தருவிக்கப்பட்டு பல்வேறு பகுதிகளில் கைவிடப்பட்ட நீர் குழாய்களைப் பயன்படுத்தி கிராமியப்பகுதிகளில் நீர் விநியோகத்தை முறைப்படுத்துவது குறித்தும் ஆராயப்பட்டது. நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களை மேம்படுத்த வேண்டியதன் அவசியம், குறிப்பாக அரசாங்கத்தால் சம்பந்தப்பட்ட நிர்மாணப்பணிகளுக்காக ஆலோசனை சேவையை நிறுவ வேண்டியதன் அவசியம் குறித்தும் ஆராயப்பட்டது.

## “கருணாவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுங்கள்”

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், அரசோடு ஒட்டு குழுக்களாக செயற்பட்ட நிலையில் அண்மையில் கைது செய்யப்பட்ட கருணா குழுவை சேர்ந்த முன்னாள் முதலமைச்சர் பிள்ளையான் மற்றும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் இணைப்பாளராகவும் மாகாண சபை உறுப்பினராக இருந்த இனிய பாரதியும் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள்.

இவர்களுடைய கைதை தொடர்ந்து பல கைதுகள் தற்போது இடம் பெற்றுக் கொண்டிருக்கிறது. அவர்கள் கடந்த காலங்களில் பல வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்களுடன் தொடர்பு பட்டவர்களாக நேரடியான சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. அந்த அடிப்படையில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அத்துடன், அவர்களுடைய தலைமை ஒருங்கிணைப்பாளராக செயற்பட்டவர் கருணா அம்மான் அவர்கள். அவர் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்களுடன் நேரடியாக குற்றச்சாற்றப்படவில்லை என்ற போதிலும் அவ்வாறு இருந்திருந்தால் அல்லது அக்காலத்தில் குறித்த குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டிருக்கும் ஆனால் அவர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

விசேடமாக பிள்ளையான இனிய பாரதி குழுக்களுடன் இயங்கியவர்கள் இன்று கூட கல்முனை பகுதியில் தற்போது சுதந்திர மாக நடமாடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தொடர்பான சாட்சியங்களையும் குற்றப்புலனாய்வு பிரிவு பதிவு செய்ய வேண்டும்.

மேற்குறிப்பிட்ட குறிப்பிட்ட அவர்களையும் விசாரணை வளையத்துக்குள் எடுத்து விசாரணைகளை ஆரம்பிப்பதன் மூலம் பல்வேறு விடயங்கள் வெளியாகும்.எனவே அவர்கள் மிக விரைவில் கைது செய்யப்பட வேண்டும் என தெரிவிக்க விரும்புகிறேன் என்றார்.







# ‘நீதியின் ஓலம்’ கையெழுத்து வேட்டை

தமிழர்களுக்கு இதுவரை காலமும் நடந்து கொண்டிருக்கும் அநீதிகளுக்கு எதிராக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபைக்கு சமர்ப்பிக்கப்படவுள்ள சர்வதேச நீதி கோரிய ‘நீதியின் ஓலம்’ எனும் மையக் கருத்துடனான பொது மக்கள் கையெழுத்து சேகரிப்பு, முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் தலைமையில் திங்கட்கிழமை(25) அன்று காரைதீவில் நடைபெற்றது.

– வி.ரி.சகாதேவராஜா











## புதைகுழிகளுக்கு பொறுப்புக்கூற வேண்டியவர்களே

# “நீதிக்கு போராடுகின்றனர்”

■ நிதர்ஷன் வினோத்

“வடக்கு கிழக்கில் இருக்கும் புதைகுழிகளுக்கு பொறுப்புக் கூற வேண்டியவர்களே தமிழ்த் தேசிய பரப்பின் உரித்தாளர்கள் என கூறி கூட்டமைத்து போராடுகின்றனர். இது தமிழ் மக்களின் சாபக்கேடு” என சட்டத்தரணி வி.மணிவண்ணன் ஆதங்கம் வெளியிட்டுள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் வைத்து செவ்வாய்க்கிழமை (26) அன்று இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

“தமிழ் மக்கள் கூட்டணிக்கு அழைப்பு விடுக்காமையானது தேசியப் பரப்பில் பயணிப்பவர்கள் என்று கூறி எதிர்வரும் 29ஆம் திகதியன்று கையெழுத்து போராட்டம் மேற்கொள்ள முயற்சிப்பவர்களின் தேசியக் கொள்ளைக்கு எமது நிலைப்பாடு ஒத்துவராது என நினைத்திருக்கலாம்.




அவர்கள் கூட்டு என்ற போர்வையில் எதை சாதிக்க முயல்கின்றார்கள் என தெரியவில்லை.

திங்கட்கிழமை (25) அன்று கூடிய கூட்டுக்குள் பல கட்சிகளின் பிரதிநிதிகள் இராணுவத்துடன் இணைந்து ஒட்டுக்குழுவாக பல்வேறு மோசமான செயற்பாடுகள் செய்தவர்கள் என்பதை மக்கள் அறிவர்.

அதன்படி, இதில் உள்ள அவர்களில் சிலர் செம்மணி உள்ளிட்ட பல கொலைகளுக்கு பொறுப்புக் கூற வேண்டியவர்களாகவும் இருக்கும் நிலை உருவாகலாம்.

எனவே, அவர்கள் முன்னெடுக்கும் இந்த ஆர்ப்பாட்டம் எந்தளவு வெளிப்படையானதாகவும் உணர்பூர்வமானதாகவும் இருக்கும் என்பது தெரியாது.

இதேவேளை, குறித்த போராட்டத்தை முன்னெடுக்கும் தலைவர்கள் உண்மையானவர்களாக இல்லாது போனாலும் ஆர்ப்பாட்டம் அவசியமானது.

அந்த வகையில், ஆர்ப்பாட்டத்தின் வலுவாக்கலுக்கு எமது கட்சியின் ஆதரவு என்றும் இருக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பொது சுகாதார பரிசோதகருக்கு அச்சுறுத்தல்

■ ரீ.எல்.ஜவ்பர்கான்

கடமையில் இருந்த பொதுச் சுகாதார பரிசோதகருக்கு வர்த்தகர் ஒருவர் அச்சுறுத்தல் விடுத்தமை தொடர்பாக காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் செவ்வாய்க்கிழமை (26) காலை முறைப்பாடு ஒன்றை பதிவு செய்யப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு ஆரையம்பதி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் பொது சுகாதார பரிசோதகரான இளைய தம்பி நகுலேஸ்வரன் என்பவர் மீது வர்த்தகர் ஒருவரினால் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை (23)அன்று சந்தேக நபரான வர்த்தகருக்கு சொந்தமான வர்த்தக நிலையத்தில் பழுதடைந்த பழங்கள் மற்றும் மனித பாவனைக்கு உதவாத உணவுப் பொருட்கள் பொதுச் சுகாதார பரிசோதகர்களினால் கைப்பற்றப்பட்டு அவர் மீது நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இந்நிலையில், குறித்த வர்த்தக



நிலையத்திற்கு முன்னால் செவ்வாய்க்கிழமை (26) காலை மேற்படி பொது சுகாதார பரிசோதகர் சென்று கொண்டிருந்த நிலையில், குறித்த பொதுச் சுகாதார பரிசோதகரை அச்சுறுத்தியதுடன், தனது சீருடைகளை களைவதாகவும் ஒரு வாரத்திற்குள் வேலையில் இருந்து இடை நிறுத்துவதாகவும் அச்சுறுத்தியுள்ளதாக சுகாதார பரிசோதகர் காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.


# கசிப்புடன் 30 பேர் கைது

■ ரீ.எல்.ஜவ்பர்கான்

சுமார் 95,000 மில்லி லீட்டர் கசிப்பு போதைப் பொருட்களுடன் 30 பேர் காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பல்வேறு பிரதேசங்களில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்துள்ளனர்

மட்டக்களப்பு, காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஆரையம்பதி, தாழங்குடா, புதுக்குடியிருப்பு, கிரான்குளம், நாவற்குடா, கல்லடி உட்பட்ட பிரதேசங்களில் பொலிஸார் நடத்திய திடீர் சுற்றிவளைப்பின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்

கைது செய்யப்பட்ட நபர்களிடமிருந்து சுமார் 95,000 மில்லி லீட்டர் கசிப்பு



மீட்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட நபர்கள் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளதுடன், இது தொடர்பாக காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# மத்தேகொட வீதி விபத்தில் ஒருவர் பலி

கொட்டாவ - பிலியந்தலை 342 பேருந்து வழித்தடத்தில் மத்தேகொட சல்கஸ் சந்தி அருகில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக மத்தேகொட பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொட்டாவயிலிருந்து பிலியந்தலை நோக்கிச் சென்ற காரை முந்திச் செல்ல முயன்ற மோட்டார் சைக்கிள் பிலியந்தலையிலிருந்து கொட்டாவ நோக்கி பயணித்த பேருந்துடன் நேருக்கு நேர் மோதியதில், படுகாயமடைந்த மோட்டர் சைக்கிள் ஓட்டுநர் ஹோமாகம வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் போது உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் மத்தேகொட சல்கஸ் வீதியைச் சேர்ந்த 30 வயதுடைய தொழில்நுட்ப வல்லுநர் என தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





# ஸ்ரீ சித்திரவேலாயுதர் ஆலய கொடியேற்றம்

சின்னக்கதிர்காமம் என சிறப்பித்துக் கூறப்படும் மூர்த்தி, தலம், தீர்த்தம் என முறையாக அமையப்பெற்ற வெருகலம்பதி அருள் மிகு ஸ்ரீ சித்திரவேலாயுதர் சுவாமி தேவஸ்தானத்தின் வருடாந்த மகோற்சவத்தின் கொடியேற்றம் திங்கட்கிழமை(25) நண்பகல் 12.05 மணிக்கு இடம்பெற்றது.

தொடர்ந்து பதினெட்டுத் தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளதுடன், எதிர்வரும் செப்டெம்பர் 09ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7.33 மணிக்கு தீர்த்தோற்சவம் இடம்பெறும் என தெரிவிக்கப்படுகிறது.

– அ.அச்சுதன்

# முதலாவது பெண் பதிவாளர் நாயகம் நியனம்

■ அ.அச்சுதன், எஸ்.கீதபொன்கலன்

இலங்கை வரலாற்றில் முதலாவது பெண் பதிவாளர் நாயகமாக திருகோணமலையைச் சேர்ந்த இலங்கை நிர்வாக சேவையின் அதிவிசேட தரமுடைய சசிதேவி ஜலதீபன் நியமிக்கப்பட்டு திங்கட்கிழமை(25) அன்று தனது கடமைகளை பொறுப்பேற்றுள்ளார்.

2003ஆம் ஆண்டு இலங்கை நிருவாக சேவையில் இணைந்து கொண்டமை முதல் 2003.12.01 முதல் 2006.05.31 வரை திருகோணமலை மாவட்டத்தின் பட்டினமும் சூழலும் உதவிப் பிரதேச செயலாளராவும், 2006.06.01 முதல் 2015.03.17 வரை பிரதேச செயலாளராகவும், 2015.03.18 முதல் 2018.04.04 வரை பொலன்னறுவை மாவட்டத்தின் திம்புலாகல பிரதேச பிரதேச செயலாளராகவும், 2018.04.05 முதல் 2019.12.01 வரை தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி, மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு, இளைஞர் விவகார வடக்கு அபிவிருத்தி அமைச்சினது சிரேஷ்ட உதவிச் செயலாளராகவும், 2019.12.02 முதல் 2020.08.14 வரை தேசிய கொள்கைகள் இராஜாங்க அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளராகவும், 2020.08.15 முதல் 2021.09.30 வரை நிதி மூலதனச் சந்தை மற்றும் அரச தொழில் முயற்சி மறு சீரமைப்பு இராஜாங்க அமைச்சினதும் சிரேஷ்ட உதவிச் செயலாளராகவும், 2021.10.01 முதல் 2024.03.17 வரை கருத்திட்ட முகாமைத்துவ மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தின் பணிப்பாளராகவும், 2024.03.18 முதல் 2025.08.22 வரை பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் மேலதி செயலாளராகவும் கடமையாற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.



# வாட்ஸ்அப் ஹேக் செய்யப்பட்டதும் உஷாராகி விடுங்கள்

ஒரு தொழிலுக்குச் சென்று, சுயதொழிலை நடத்தி, வியாபாரத்தில் ஈடுபட்டு, பணத்தை திரட்டுவதை விடவும் ஊழல் மோசடியின் ஊடாக, பணத்தை மோசடி செய்யும் நபர்களின் எண்ணிக்கையும் முறைகளும் அதிகரித்துள்ளன. அதில், வாட்ஸ்அப் கணக்கை முடக்கி (ஹேக்செய்து) அதனூடாக, வாட்ஸ்அப் கணக்கில் இருக்கும் நண்பர்களுக்கு குறுஞ்செய்தியை அனுப்பி மோசடியில் ஈடுபடும் செயற்பாடுகள் அதிகரித்துள்ளன.

நான், உங்களிடம் ஒரு உதவியை கோருகின்றேன். தனது வங்கிக் கணக்குக்கு ஒரு இலட்சம் ரூபாயை அவசரமாக வைப்பிலிடவும், நாளை காலையில் மீள வைப்பிலிடுவேன் என அந்த குறுஞ்செய்தியில் குறிப்பிடப்பட்டிருக்கும்.

வாட்ஸ்அப் கணக்கை வைத்திருப்பவர்கள், நண்பர்கள், குடும்ப உறுப்பினர்கள், அலுவலகத்தில் இருப்பவர்களை மட்டுமே குழுவாக இணைத்திருப்பார்கள், வெளிநபர்கள் இருக்கமாட்டார்கள். இந்நிலையில், இந்த குறுஞ்செய்தியை பார்த்தவுடன், நண்பர்கள், வங்கிக்கணக்கு பணத்தை வைப்பிலிட்டு ஏமாந்து விடுவார்கள்.

தனது நண்பர்களின் வாட்ஸ்அப் கணக்கில் இருந்து மேலே குறிப்பிட்டதைப் போல, உதவித்தொகை கேட்டு ஏதாவது குறுஞ்செய்தி வந்தால், தனது நண்பனுக்கோ, நண்பிக்கோ சாதாரண தொலைபேசி அழைப்பை எடுத்து, தீர விசாரித்த பின்னர், ஒரு முடிவை எடுக்கவேண்டும்.

வாட்ஸ்அப் புதிய மோசடி தடுப்பு நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தியுள்ள நிலையில், பயனர்களை ஏமாற்றும் நடவடிக்கைகள் குறித்து எச்சரிக்கும் வகையில் இந்த அறிவிப்பு வந்துள்ளது, எடுத்துக்காட்டாக, அவர்களின் தொலைபேசி தொடர்பு பட்டியலில் இல்லாத ஒருவர் குழு அரட்டையில் சேரும்போது, வாட்ஸ்அப் கணக்குகளை ஹேக் செய்ய அல்லது போலி முதலீட்டுத் திட்டங்கள் மற்றும் பிற மோசடிகளை ஊக்குவிக்கும் குழு அரட்டைகளுடன் பயனர்களை இணைக்க குற்றவாளிகள் பயன்படுத்தும் மிகவும் பொதுவான தந்திரோபாயத்தை முறியடிப்பதே இந்த நடவடிக்கையின் நோக்கமாகும்.

இலங்கையில், இந்த மோசடி தற்போது அதிகரித்துள்ளது.

ஆகையால், வாட்ஸ்அப் கணக்கு வைத்திருக்கும் அனைவரும் மிக விளிப்பாக இருக்கவேண்டும். இல்லையேல் இழந்த பணத்தை மீளவும் திருப்பி பெற முடியாது. சிலவேளையில், சர்வதேச மோசடி வலையமைப்பின் ஊடாகவும் பணம் மோசடி செய்யப்படுகின்றது.

பொதுவாக, மோசடி செய்பவர்கள் சமூக ஊடகங்கள் அல்லது தனியார் செய்தியிடல் செயலிகளில் உரையாடல்களை உருவாக்குவதற்கு முன்பு குறுஞ்செய்தி மூலம் தங்கள் இலக்குகளுடன் இணைகிறார்கள் என்று இந்த மோசடிகள் பொதுவாக பணம் செலுத்துதல் அல்லது கிரிப்டோகரன்சி தளங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படுகின்றன.

இலங்கையில் மட்டுமன்றி, மியன்மார், கம்போடியா மற்றும் தாய்லாந்து போன்ற தென்கிழக்கு ஆசிய நாடுகளில் செயல்படும் சைபர் கிரைம் மையங்கள் பில்லியன் கணக்கான டொலர்களை மக்களை ஏமாற்றுவதாக அறியப்படுகிறது.

இந்த மையங்கள் வேலைகளுக்கு ஆட்களை சேர்ப்பதற்கும் பெயர் பெற்றவை, பின்னர் அவை மோசடி செய்ய நிர்பந்திக்கப்படுகின்றன.

அப்பகுதியிலுள்ள அதிகாரிகள், சாத்தியமான மோசடிகள் குறித்து விழிப்புடன் இருக்கவும், தங்கள் கணக்குகள் ஹேக் செய்யப்படாமல் பாதுகாக்க வாட்ஸ்அப்பின் இரண்டு-படி சரிபார்ப்பு அம்சம் போன்ற மோசடி எதிர்ப்பு நடவடிக்கைகளைப் பயன்படுத்தவும் மக்களை வலியுறுத்துகின்றனர்.


## தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk


### ஜனாதிபதிகளின் தனிப்பட்ட வாழ்க்கையும்

# உத்தியோகபூர்வ வாழ்க்கையும் ஒன்றா?



எம்.எஸ்.எம். ஐயூப்

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க 2023ஆம் ஆண்டு ஜீ 77 உச்சி மாநாட்டுக்காக கியூபாவுக்குச் விஜயம் செய்து வரும் வழியில், இங்கிலாந்தில் வுல்வர்ஹம்ப்டன் பல்கலைகழகத்தில் தமது மனைவியின் பட்டமளிப்பு விழாவொன்றுக்காகவும் சென்றுள்ளார.

அந்த விழாவுக்கு சென்றமை அவரது தனிப்பட்ட விஜயம் என்றும் அதற்காக அவர் இலங்கைப் பணத்தில் ஒரு கோடியே 62 இலட்சம் ரூபாய் அரச பணத்தை செலவிட்டுள்ளார் என்றும் குற்றஞ்சாட்டியே அவர் கடந்த வெள்ளிக்கிழமை (22) இரகசிய பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

அன்றே அவர் கொழும்பு பிரதம நீதவான் நிலுப்புலி லங்காபுர முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார். வழமைக்கு மாறாக, பல மணி நேரம் சட்டமா அதிபர் திணைக்களத்தினதும் ரணிலினதும் சட்டத்தரணிகளின் வாதப் பரதிவாதங்களை கேட்டு இறுதியில் நீதிவான ஒகஸ்ட் 26ஆம் திகதி வரை அவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

முன்னாள் ஜனாதிபதி தனிப்பட்ட பயணமொன்றுக்காக அரச பணத்தை செலவழித்தார் என்பது உண்மையாக இருந்தால், அதற்காக அவர் விசாரிக்கப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும். அவர் முன்னாள் ஜனாதிபதி என்பதற்காகவோ, நோயாளர் என்பதற்காகவோ, அவரை விட்டுவிடவோ, மன்னிக்கவோ சட்டத்தில் இடமில்லை.

அந்த குற்றச்சாட்டு தொடர்பாக அரச தலைவர் ஒருவரோ, அரச அதிகாரி ஒருவரோ, சாதாரண பிரஜை ஒருவரோ, பொலிஸிலோ இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவிலோ முறைப்பாடு செய்வதை அரசியல் பழிவாங்கல் என்று கூற முடியாது.

அந்த முறைப்பாட்டின் பிரகாரம், பொலிஸார் அவரை கைது செய்வதையும் நீதி மன்றத்தில் ஆஜர் செய்வதையும் பழிவாங்கல் என்று கூற முடியாது. அதன் பிரகாரம், நீதிமன்றம் அவரை விளக்க மறியலில் வைப்பதையும் பழிவாங்கல் என்று கூற முடியாது. அவ்வாறு கூறுவது நீதிமன்ற அவதூறாகலாம். சட்டத்தின் முன் சகலரும் சமம் என்பதே நியதியாகும்.

இவ்விடயம் தொடர்பான வழக்கு விசாரணையின் இறுதியில் அவர் நிராபராதி என்று தீர்ப்பளிக்கப்பட்டால் மட்டுமே அவருக்கு எதிரான முறைப்பாடு பழிவாங்கல் என்று கூறலாம். சட்டமா அதிபர் திணைக்களத்தை வழிநடத்தும் அதிகாரம் நீதி அமைச்சருக்கு இருப்பதால் அவரை கைது செய்ததையும் சிலவேளை பழிவாங்கலாக கருதலாம். ஆனால், அதற்கு அப்பால் நீதிமன்றத்தின் செயற்பாடுகளை விமர்சிக்க முடியாது. அதேவேளை, நீதிமன்றத்தால் நிரபராதி எனறு தீர்ப்பளிக்கப்படும் சகலரும் பழிவாங்கலுக்கு உள்ளானவர்களுமல்ல.

லண்டனிலிருந்து வொல்வர்ஹமப்டன் வரையிலான ரணிலின் பயணம் தனிப்பட்ட பயணம் என்பதால் அதற்காக அரச பணத்தை செலவிட்டதற்காகவே பொலிஸார் ரணிலை கைது செய்தனர். இதற்கு பதிலளித்த ரணில் ஜனாதிபதி ஒருவருக்கு தனிப்பட்ட வாழ்க்கை என்றும் பொது வாழ்க்கை என்றும் இரண்டு வாழ்க்கை இல்லை என்று இரகசிய பொலிஸாரிடம் கூறியுள்ளார். ஒரு ஜனாதிபதிக்கு குறிப்பிட்ட கடமை நேரம் இல்லை என்ற அர்த்தத்தில் அதனை ஏற்றுக்கொள்ளலாம்.

ஆனால், செலவு என்று வரும்போது, அதனை ஏற்க முடியாது. உதாரணமாக, ஒரு ஜனாதிபதிக்கு இரண்டு வாழ்க்கை இல்லாவிட்டாலும் அவர் நாளாந்தம் தமது நண்பர்களுக்கு நட்சத்திர ஹோட்டல்களில் அரச பணத்தில் விருந்தளித்தால் அதனை ஏற்க முடியாது. அவர் அரச பணத்தில் தமது சொந்தப் பெயரில் சொத்து சேகரித்தால் அதனை ஏற்க முடியாது. அதேபோல், அவர் தமது குடும்பத்துடன் வெளிநாடுகளில் சவாரி செய்தால் அதனை ஏற்க முடியாது.

இங்கு எழும் முக்கியமான பிரச்சினை என்னவென்றால்? ஒரு ஜனாதிபதியோ அல்லது ஏனைய மக்கள் பிரதிநிதிகளோ தமது அலுவலக பணிகளையும் சொந்தப் பணிகளையும் வேறுபடுத்திக்கொள்வது எவ்வாறு என்பதேயாகும். வேறு வார்த்தைகளில கூறுவதாக இருந்தால், அவர்கள் தமது சொந்த தேவைகளுக்காக அரச பணத்தை ஒருபோதும் கலக்காமல் நடந்துகொள்ள முடியுமா? என்ற கேள்வியை பலர் எழுப்புகின்றனர்.

இந்த மக்கள் பிரதிநிதிகளுக்கு உத்தியோகபூர்வ பணிகளின்போது, செலவழிப்பதற்காக பணம், வாகனங்கள். அவர்களது பாதுகாப்புக்கான அதிகாரிகள் மற்றும் வாகனங்கள் போன்றவை அரச பணத்தில் வழங்கப்படுகின்றன. அவர்களது சொந்த செலவுக்காக சம்பளமும் வழங்கபப்படுகிறது. இதனை எதிர்க்க முடியாது. ஆளும் தேசிய மக்கள் சக்தியும் அதனை எதிர்க்கவில்லை.

பதவிக் காலம் முடிவடைந்து ஓய்வுபெற்ற ஜனாதிபதிகள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் போன்றவர்களுக்கு ஓய்வூதியம், உத்தியோகபூர்வ இல்லங்கள், அலுவலகங்கள், வாகனங்கள் போன்றவற்றை வழங்குவதையே அக்கட்சி எதிர்க்கிறது.

பட்டமளிப்பு விழாவுக்கு தாம், தமது மனைவி மற்றும் அதிகாரிகளுடன் செல்லவில்லை என்றோ, அதற்காக அரச பணத்தை செலவழிக்கவில்லை என்றோ, ரணில் தரப்பில் கூறப்படுவதில்லை. ஆனால், அது உத்தியோகபூர்வ பயணமா? இல்லையா? என்ற விடயத்தில் தான் சர்ச்சை எழுந்துள்ளது. இந்த விடயத்தில் அவருக்காக வாதிடுவோர் மத்தியிலும் ஒருமித்த கருத்து இல்லை என்றே தெரிகிறது.

இது தனிப்பட்ட பயணம் என்றே ரணில் ஜனாதிபதியாக இருந்தபோது, அவரது அலுவலகம் இலண்டனில் உள்ள இலங்கை தூதரகததுக்கு அறிவித்துள்ளது. பின்னர் இது தொடர்பாக சிலர் கருத்து தெரிவித்ததையடுத்து, அவரது அலுவலகம் அதனை வெறுமனே விஜயம் என்று குறிப்பிட்டதாகவும் நீதிமன்றத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டது. அது உண்மையாயின் லண்டனில் இருந்து வொல்வர்ஹம்ப்டன் பல்கலைகழகம் வரையிலான பயணம் தனிப்பட்ட பயணம் என்பதை மறைக்க அதிகாரிகள் முற்பட்டுள்ளனர்.

ஞாயிற்றுக்கிழமை (24) அன்று நடைபெற்ற எதிர்க்கட்சித் தலைவர்களின் ஊடக சந்திப்பில் இந்த விடயம் தொடர்பாக கருத்து தெரிவிக்கப்பட்டது. "ரணில் திருடர்" என்றும் அவரை சிறையில் அடைக்க வேண்டும் என்றும் கடந்த காலங்களில் கூறியவர்களும் அந்த ஊடக சந்திப்பில் கலந்து கொண்டனர். அவ்வனைவரும் ரணில் விக்ரமசிங்கவை நியாயப்படுத்தியும் அவரை கைது செய்ததை எதிர்த்தும் கருத்து தெரிவித்த போதிலும், அவரது வொல்வர்ஹம்ப்டன் பயணம் தனிப்பட்ட பயணமா? உத்தியோகபூர்வ பயணமா? என்பதைப் பற்றி அவர்களிடையே ஒருமித்த கருத்து இல்லை என்பது தெரியவிருந்தது.

வொல்வரஹம்ப்டன் பயணத்தில் இரண்டு நிகழ்ச்சிகளில் ரணில் கலந்து கொண்டதாகவும் அதில் ஒன்று அப்பல்கலைகழகத்தின் வேந்தர் ஸ்வராஜ் போல் வழங்கிய பகல் போசன விருந்து என்றும் மற்றையது பட்டமளிப்பு விழா, என்றும் முன்னாள் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் கூறினார். விருந்துக்கு ரணிலுக்கு இலங்கையின் ஜனாதிபதி என்ற அடிப்படையிலேயே அழைப்பு விடுக்கப்பட்டதாகவும் எனவே, இப்பயணம் உத்தியோகபூர்வ பயணமாகவே கருதப்பட வேண்டும் என்றும் அவர் மேலும் கூறினார்.

அதாவது, ரணில் பிரதானமாக பட்டமளிப்புக்காக செல்லவில்லை. விருந்துக்காகவே சென்றுள்ளார். அத்தோடு, தமக்கு வழங்கப்பட்ட பட்டத்தையும் மைத்திரி விக்ரமசிங்க பெற்றுக் கொண்டுள்ளார். இது உண்மையாக இருக்கலாமா? அவ்வாறாயின், நாடு வங்குரோத்து அடைந்த நிலையில் இருக்கும் போதும் ஒரு விருந்தில கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி ஒரு கோடியே 62 இலட்சம் ரூபாய் செலவழித்துள்ளார்.

ஊடக சந்திப்பில் கலந்துகொண்ட ஏனையோர் இது தனிப்பட்ட பயணமாக இருந்த போதிலும், அதற்காக பொதுப் பணம் செலவழிக்கப்பட்ட போதிலும், ஒரு ஜனாதிபதிக்கு அதுபோன்ற சலுகைள் இருக்க வேண்டும் என்ற தோரணையிலேயே கருத்து தெரிவித்தனர். ஜனாதிபதி ரணில் கியூபாவிலிருந்து வரும் வழியில் வொல்வர்ஹம்ப்டனுக்குச் செல்லாமல் லண்டனில் ஒரு ஹோட்டலில் இரண்டு நாள் தங்கியிருந்தால் அதற்கான செலவையும் அவரிடம் அறவிட வேண்டுமா? என்றும் சிலர் கேள்வி எழுப்பியிருந்தனர். அவ்வாறு அவர் தனிப்பட்ட தேவைக்காக தங்கியிருந்தால் அதற்கான செலவு அவரிடமிருந்து அறவிடப்படத் தான் வேண்டும். இல்லாவிட்டால் அவர் ஒரு மாதம் தங்கி விட்டும் வரலாம்.

ஜனாதிபதிகளோ, அமைச்சர்களோ, எம்.பிக்களோ தாம் விரும்பியவாறு அரச பணத்தை செலவளிக்க முடியாது என்ற தேசிய மக்கள் சக்தியின் கருத்து சரியானதே. ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க கடந்த பொதுத் தேர்தல் காலத்தில் தேசிய மக்கள் சக்தியின் பிரசார பணிகளில் கலந்து கொண்டபோது, அவரது பயணச் செலவுகளை அவரது கட்சியே ஏற்றது என்று பிரதி அமைச்சர் சமந்த வித்தியாரத்ன கூறியிருந்தார். ஜனாதிபதி ஜேர்மனிக்கு அண்மையில் விஜயம் செய்தபோது, அங்கு வாழும் தேசிய மக்கள் சக்தி ஆதரவாளர்களையும் சந்திக்கச் சென்றிருந்தார். அப்போது, அவரது உணவு மற்றும் பயணச் செலவுகளை அந்த ஆதரவாளர்களே ஏற்றனர் என்று அங்குள்ள தேசிய மக்கள் சக்தி ஆதரவாளர் ஒருவர் முகநூலில் பதிவிட்டு இருந்தார்.

ஆனால், அந்த நியதியில் ஒரு சில சிக்கல்கள் இருக்கின்றன. அனுரகுமார ஜனாதிபதி என்ற ரீதியில் உத்தியோகபூர்வ அலுவல் ஒன்றுக்காக அனுராதபுரத்துக்குச் செல்கிறார் என்று வைத்துக்கொள்வோம். அதே மாவட்டத்தில் சில கிலோ மீட்டர் தொலைவில் தம்புத்தேகமவில் அவரது தாயார் வாழ்கிறார். அவர் தாயாரை பார்க்க விரும்புகிறார். அது தனிப்பட்ட பயணமாகும். எனவே, அவர் அதற்காக தமது உத்தியோகபூர்வ வாகனத்தை உபயோகிக்காமல் தனியார் வாகனம் ஒன்றை பாவிப்பதா? நண்பர் ஒருவரின் வாகனத்தை பயன்படுத்தினால் அது இலஞ்சமாக கருதப்படலாம்.

ஜனாதிபதியின் நெருங்கிய உறவினர் ஒருவர் இறந்துவிட்டால் அவர் இறுதி கிரியைகளில் கலந்துகொள்ள எந்த வாகனத்தில் பயணிப்பது? இதுபோன்ற நடைமுறை பிரச்சினைகளையும் தவிர்த்து ஜனாதிபதிகள் பொதுப் பணத்தை துஷ்பிரயோகம் செய்வதையும் தடுக்கும் வகையில் சட்டம் கொண்டு வராவிட்டால் பதவிக்காலம் முடிவடைந்ததன் பின்னர் அனுரகுமாரவும் பல வழக்குகளை சந்திக்க நேரிடும்.



## வாழ்வியல் தரிசனம்

சுய நலமில்லாமல் வாழ்பவர்களை பலர் சுரண்ட நினைக்கின்றார்கள். உறவுகளை, உதவுபவர்களை எளிதாக ஏமாற்றுபவர்கள், தங்களை தாங்களே சிறுமைப்படுத்துகின்றனர்.

இத்தனை நடந்த பின்னரும் கூட, தாராளமனம் படைத்தோர் தங்களது நல்ல செயல்களை நிறுத்துவதும் இல்லை.

இந்த உலகில் எல்லாமே நடக்கும். பெற்றோரை மதிக்காத பிள்ளைகள், ஆசானை மறந்த மாணவர்கள், கொடுத்தவர்களுக்கே துரோகம் செய்யும் எத்தர்கள் என எராளமான பிரகிருதிகள் எம்மோடு வாழ்ந்தபடியே நடமாடுகின்றனர்.

சந்தோஷமாகக் கோவில் திருவிழாவை மக்கள் கொண்டாடும்போது, அங்கேயும் திருடர் கூட்டம் தங்கள் கைரிசையைக் காட்டுகின்றனர். எப்படி எச்சரிக்கை செய்தாலும் மக்கள் அதனைக் கேட்காமல் பணம், பொருள்களை துஷ்டர்களிடம் இழக்கின்றார்கள்.

நல்வாழ்வு கெட்டவர்களுக்குப் பிடிக்காது. குற்றச்செயல்களை தங்களின் நிரந்தர தொழிலாகக் கொண்டவர்கள், திருந்துவது இல்லை. முற்காலத்தில் அரசர்கள், திருடர்களை எத்தர்களை மன்னிப்பதில்லை. பெரும் தண்டனை வழங்குவார்கள். உலக அமைதி தீயோர்களை களைவதில் தங்கியுள்ளது.

– பருத்தியூர் பால.வைரவநாதன்

## கடிதங்கள்

### ஹட்டன் குப்பையால் பெரும் அவதி

ஹட்டன் டன்பார் நகர பகுதியில் காணப்படும் அடுக்கு மாடி கட்டிட தொகுதியில் கழிவுகள் கொட்டப்படுவது அதிகரித்துள்ளது. இதனால் பொதுமக்கள் பல்வேறு சிரமங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

ஹட்டன் நகரில் ஆங்காங்கே கொட்டப்படும் கழிவுகளால் பல்வேறு அசௌகரியங்கள் ஏற்படும் நிலையில், அட்டன் ஹைலண்ட் கல்லூரிக்கு அருகில் உள்ள நிறைவு பெறாத அடுக்கு மாடி கட்டிடத்தில் தேவையற்ற சம்பவங்கள் இடம்பெற்று வருவதாகவும் அப் பிரதேசவாசிகள் கழிவுகளை அக்கட்டிடத்தினுள் வீசி விட்டு செல்வதாகவும் துர்நாற்றத்தால் சுகாதார சீர்கேடு ஏற்படுவதாகவும் பொது மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய ஹட்டன் நகரசபை தலைவர், உப தலைவர் மற்றும் நகர சபை செயலாளர் பொது சுகாதார பரிசோதகர் உள்ளிட்ட குழுவினர் நேரில் சென்று பார்வையிட்டனர்.

எனவே, உரிய கட்டிட உரிமையாளருக்கு திறந்த வெளியில் காணப்படும் கட்டிடத்தை பாதுகாப்பான முறையில் வைக்கக்கோரி நகரசபையினூடாக கடிதம் அனுப்பி வைக்கப்படும் என்றும் அதன் பின்னரும் பாதுப்பாற்ற முறையில் இவ்வாறு அநாவசிய விடயங்கள் இடம்பெறுவதற்கான ஏதுவான வகையில் இக்கட்டிடம் இருக்கும் பட்சத்தில் சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ஸ்தலத்துக்கு விரைந்திருந்த பாராளுமன்ற உறுப்பினர் கிருஷ்ணன் கலைச்செல்வி தெரிவித்துள்ளார்.

மு.இராமச்சந்திரன்



# “குருக்கள்மடம் படுகொலை: பயணிகளைக் கொல்லுதல்”



ஏ.எச்.ஏ.ஹுஸைன்

பாஸிர் கலீலுர் றஹ்மான் தயாரித்துள்ள “குருக்கள்மடம் படுகொலை” சம்பந்தமான காட்சிப்படுத்தலுடன், மூவின செயற்பாட்டாளர்களும் இணைந்த சகவாழ்விற்கான சினேகபூர்வ கலந்துரையாடல் மட்டக்களப்பு அமெரிக்க மிஷன் மண்டபத்தில் நடைபெற்றது.

சகவாழ்விற்கும் நல்லிணக்கத்திற்குமான நண்பர்கள் குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்நிகழ்வில் தமிழ், முஸ்லிம், சிங்கள சமூகங்களைச் சேர்ந்த செயற்பாட்டாளர்களும் கடந்த கால போரின் விளைவாக நேரடியாகப் பாதிக்கப்பட்டவர்களின் குடும்ப உறவினர்களும் கலந்து கொண்டனர்.

நாடறிந்த வளவாளரும் இலங்கை அவிருத்திக்கான உதவு ஊக்க மையத்தின் அலுவலருமான ஏ.சொர்ணலிங்கம் நெறிப்படுத்தியிருந்த இந்த நிகழ்வில், சமூக செயற்பாட்டாளர் பஹ்மியா ஷரீப், ஆவண குறும்படம் பற்றிய அறிமுகத்தைச் செய்து வைத்தார்.

“குருக்கள்மடம் படுகொலை - பயணிகளைக் கொல்லுதல்” ஆவண குறும்படம் காட்சிப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து மூவின சமூக

செயற்பாட்டாளர்களுக்கிடையிலான பரஸ்பர கருத்துப் பகிர்வு இடம்பெற்றது.

அவ்வேளையில், இந்த ஆவண குறுங்காட்சியின் அம்சங்கள், எதிர்கால சமாதான சகவாழ்வு பற்றி நிகழ்வில் கலந்து கொண்ட சமூக செயற்பாட்டாளர்களால் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

தமிழ், முஸ்லிம், சிங்கள சகோதரிகள் ஒன்றியத்தின் செயற்பாட்டாளர் தங்கமாணிக்கம் சாரதாதேவி,

கடந்துபோன கொடிய யுத்தத்திற்கு எனது கணவரும் மகனும் பலிக்கடாவானார்கள். 32 வயதிலேயே எனது இளமைக்கால கனவுகளை யுத்தத்தால் நான் இழந்தேன். ஆனாலும், நான் சலிப்படையவில்லை. நான் இனங்களுக்கிடையில் சகவாழ்வைக் கொண்டு வரும் முயற்சியில் இன்னும் ஓடிக்கொண்டிருக்கின்றேன். இறுதி மூச்சுவரை அதற்காகப் பாடுபடுவேன்.

கடந்தகால வன்முறைகளுக்குப் பொறுப்பானவர்கள், அதனைச் செய்தவர்கள், செய்வித்தவர்கள், அதனால் பாதிக்கப்பட்டவர்கள் இத்தகையோரில் மரணித்தோர் தவிர மற்றெல்லோரும் இன்னமும் இங்குதான், இந்த நாட்டில்தான் உள்ளார்கள்.

இன, மத, மொழி, ஆண், பெண் வேறுபாடுகளைக் கடந்து எல்லோரும் எல்லோருக்குமாகப் பேசும்போது இந்த நாட்டில் நீதியும் சமாதானமும் நிலைத்து நிற்கும். இன, மத, பாகுபாடு எங்களுக்கு ஊட்டி வளர்க்கப்பட்டிருக்கிறது. இதனை இப்பொழுது நாம் மாற்றியமைக்கத் துவங்க வேண்டும்.”

சமூக பொருளாதார அபிவிருத்திச் சம்மேளனத்தின் தலைவர் ஜேசுதாஸன் ரஜிதா,

“நான் செல்லுமிடமெல்லாம் உரத்துக் கூறும் விடயம் இளம் சமுதாயத்திற்குள் வெறுப்பை ஊட்டி வளர்க்க வேண்டாம் என்பதுதான். கடந்த கால போரின் விளைவாக ஏற்பட்ட ஈடு செய்ய முடியாத பாதிப்புக்கள் எல்லா சமூகங்களுக்கும் உண்டு. இத்தகைய இழப்புக்கள். இனப்பாகுபாடுகள் எதனால் வந்தன என்று இளம் சமுதாயத்திற்குத் தெளிவூட்டி, அவை எதிர்காலத்தில் நிகழாமல் இருக்க இளம் சமுதாயத்திற்கு வழிகாட்ட வேண்டும்.

வரலாற்றை மறைத்தோ அல்லது







திரிபுபடுத்தியோ, நாம் எதிர்காலத்தை சமாதானம் நிறைந்ததாக கட்டியெழுப்ப முடியாது. நடந்தவற்றை கடந்து போனவற்றிலிருந்து கற்றுக் கொண்டு எதிர்காலத்தில் இவ்வாறு இன வன்முறைகள் ஏற்படாதிருக்க வழி காட்டப்பட வேண்டும்”

சமூக செயற்பாட்டாளர் பஞ்சாட்சரம் சேதீஸ்வரி,

கடந்துபோன விடயங்களை கற்பனைகளால் மாற்றியமைத்து சகவாழ்வையும் சமாதானத்தையும் கொண்டுவர முடியாது. நடந்தவற்றை உண்மை வரலாறாக பதிவு செய்தால்தான் எதிர்கால சந்ததியாவது இனப்பாகுபாடின்றி சமாதானத்தை அனுபவிக்க முடியும்.

இனப்பாகுபாட்டால் ஏற்பட்ட துன்பங்களும், துயரங்களும், மனஸ்தாபங்களும் பற்றி அடுத்த தலைமுறைக்கு குரோதமாக இல்லாது வரலாறாக எத்தி வைக்கப்பட வேண்டும்.

யுத்தம் நாட்டிலுள்ள அனைவரையும் அழிக்கும். ஏனென்றால், ஆயுதங்களுக்கு முன்னால் எதிர்ப்படுவோர் தமிழரா முஸ்லிமா சிங்களவரா என்று எதுவும் தெரியாது. இயக்கினால் அது எல்லோரையும் அழிக்கும்.

குருக்கள்மடம் படுகொலை ஆவணம் நீங்காத நினைவில் நிற்கும்; உணர்வுள்ள ஒரு விடமாகும். அது மறைக்கப்பட வேண்டியதல்ல.”

சிவில் அமையம் நிறுவனத்தின் பணிப்பாளர் கே. கோபிநாத்,

எப்போதுமே அடிநிலைச் சமூகங்களுக்கிடையில் முரண்பாடுகள் முனைப்புப் பெற்றதில்லை. குறுகியகால அரசியல் நோக்கோடு இருப்பவர்கள்தான் வன்முறையை, இனவாதத்தை விரும்பி விதைக்கிறார்கள். இப்பொழுதும் அத்தகைய போக்கு எல்லா மட்டங்களிலும் இருக்கிறது. வரலாற்றுப் பதிவுகளில் பாதிக்கப்பட்ட சமூகத்துப் பிரதிநிதிகள் மட்டும் ஈடுபடாமல் சமாதான சகவாழ்வை எதிர்காலத்திற்குக் கொடுக்க விரும்பும் அனைத்து சமூக ஆர்வலர்களும் ஈடுபட்டால் அதன் தாக்கம் இன்னும் செயல்பாடுள்ளதாக இருக்கும்.”என்றார்.

கடந்த கால அழிவுகளினூடே பாடங்களைக் கற்றுக் கொள்ளும் வரலாற்று ஆவணங்களிலிருந்து குணப்படுத்தலையும் சகவாழ்விற்கான சந்தர்ப்பங்களையும் ஏற்படுத்த முடியும எனபது எல்லோரது ஆதங்கமாகவும் இருப்பதாக நிகழ்வில் கலந்து கொண்ட தமிழ், முஸ்லிம், சிங்கள சமூக செயற்பாட்டாளர்களால் கருத்துத் தெரிவிக்கப்பட்டன.








# விசேட தேவையுடைய குழந்தைகளின் கற்றலில் உளவியல் உந்துதல்கள்



வே.வதுஸ்சன்,
உளவியல் சிறப்பு கலை,
யாழ். பல்கலைக்கழகம்.

மன உந்துதல்கள் என்பது ஒருவரின் நடத்தையைத் தூண்டவும், வழிநடத்தவும், நிலைநிறுத்தவும் செய்யும் ஒரு உளவியல் செயல்முறையாகும். இது உளவியல் தேவை, விருப்பம், ஆசை அல்லது இலக்கு ஆகியவற்றின் வெளிப்பாடாக இருக்கலாம். விசேட தேவையுடைய குழந்தைகள், சவால்களை எதிர்கொண்டாலும், வலுவான மன உந்துதலுடன் சிறப்பாகக் கற்கவும், தனிப்பட்ட வளர்ச்சியை அடையவும் முடியும்,

விசேட தேவையுடைய குழந்தைகள் என்பது உடல், உளவியல், அறிவுசார் அல்லது உணர்ச்சிசார் குறைபாடுகள் கொண்டவர்களைக் குறிக்கிறது. இவர்களின் கற்றல் செயல்முறைகள் சாதாரண குழந்தைகளிடமிருந்து வேறுபடுகின்றன. அவர்களுக்குச் சவால்கள் அதிகமாக இருப்பதால், அவர்களைக் கற்பிக்கவும், அவர்களின் திறன்களை வளர்க்கவும் சிறப்பு அணுகுமுறைகள் தேவை. இந்தச் சூழலில், உளவியல் உந்துதல்கள் ஒரு சக்திவாய்ந்த கருவியாகச் செயல்படுகின்றன. இது குழந்தைகளை ஆர்வத்துடனும், உறுதியுடனும் கற்றலில் ஈடுபடுத்த உதவுகிறது.

உளவியல் உந்துதல்கள் என்பது உள் உந்துதல் மற்றும் வெளி உந்துதல் எனப் பிரிக்கலாம். உள் உந்துதல் என்பது ஒரு செயலை அதன் உள்ளார்ந்த திருப்திக்காகச் செய்வது, அதே சமயம் வெளி உந்துதல் என்பது ஒரு செயலை வெளிப்புற வெகுமதிகளைப் பெறுவதற்காகச் செய்வதாகும். விசேட தேவையுடைய குழந்தைகளின் கற்றலுக்கு இந்த இரண்டு வகையான உந்துதல்களும் மிகவும் முக்கியம்.

மன உந்துதல்கள் எவ்வாறு விசேட தேவையுடைய குழந்தைகளின் கற்றலை மேம்படுத்துகின்றன என்பதைப் புரிந்துகொள்ள, நாம் சில முக்கிய விடயங்களை ஆராய வேண்டும். அதற்கிணங்க,

**ஆர்வத்தைத் தூண்டுதல்:** மன உந்துதல்கள் குழந்தைகளை புதிய விடயங்களைக் கற்றுக்கொள்ளவும், தங்கள் திறன்களை வளர்த்துக் கொள்ளவும் ஆர்வமூட்டுகின்றன. உதாரணமாக, ஒரு குழந்தைக்கு ஒரு விளையாட்டில் ஆர்வம் இருந்தால், அதனை அவர்கள் விடாமுயற்சியுடன் கற்றுக்கொள்வார்கள்.

**விடாமுயற்சியை வளர்த்தல்:** கற்றல் சவால்களை எதிர்கொள்ளும்போது, மன உந்துதல் குழந்தைகளை முயற்சி செய்யத் தூண்டுகிறது. அவர்கள் தோல்விகளைச் சந்திக்கும்போது மீண்டும் முயற்சி செய்து தங்கள் இலக்குகளை அடைய உதவுகிறது.

**சுயமரியாதையை அதிகரித்தல்:** குழந்தைகள் ஒரு இலக்கை அடைந்து வெற்றி பெறும்போது அது அவர்களின் சுயமரியாதையை அதிகரிக்கிறது. இது அவர்களுக்குத் தன்னம்பிக்கையை அளித்து மேலும் கற்கவும், சாதிக்கவும் உதவுகிறது.

**சமூகத் திறன்களை மேம்படுத்துதல்:** குழு செயல்பாடுகளில் ஈடுபடும்போது, குழந்தைகள் மற்றவர்களுடன் தொடர்புகொண்டு ஒத்துழைத்து சமூகத் திறன்களை வளர்த்துக் கொள்கிறார்கள். இது அவர்களின் மன உந்துதலை மேலும் அதிகரிக்கிறது.

உந்துதலின் பிரிவுகள்

விசேட தேவையுடைய குழந்தைகளின் கற்றலுக்கு உந்துதலின் இரு முக்கியப் பிரிவுகளும் அவசியமாகின்றன.

## உள் உந்துதல்

ஒரு செயலைச் செய்வதற்கான உள்ளார்ந்த ஆசை அல்லது ஆர்வம். இது வெளிப்புற வெகுமதிகளைச் சார்ந்து இருப்பதில்லை.

**உதாரணங்கள்:** ஒரு குழந்தை ஒரு புதிய கதையைப் படிப்பதில் அல்லது ஒரு புதிரைத் தீர்ப்பதில் மகிழ்ச்சி அடைகிறது.

**தாக்கம்:** உள் உந்துதல் நீண்ட காலத்திற்கு நிலைத்திருக்கும் மற்றும் ஆழமான கற்றலை ஊக்குவிக்கிறது. இது குழந்தைகள் தங்கள் கற்றல் செயல்முறையை அனுபவிக்க உதவுகிறது.

## வெளி உந்துதல்

ஒரு செயலை வெளிப்புற வெகுமதிகள் அல்லது தண்டனைகளைத் தவிர்ப்பதற்காகச் செய்வது.

**உதாரணங்கள்:**
ஒரு குழந்தைக்கு ஒரு பணியை முடித்ததற்காகப் பாராட்டுதல்இ சிறிய பரிசுகள் வழங்குதல்இ அல்லது பிடித்தமான உணவை அளித்தல்.

**தாக்கம்:**
வெளி உந்துதல் ஒரு குறிப்பிட்ட பணியை முடிக்க அல்லது ஒரு குறிப்பிட்ட நடத்தையைத் தூண்ட பயனுள்ளதாக இருக்கும். இது குறுகிய காலத்தில் விரைவான முடிவுகளைக் கொடுக்கலாம்.

இந்த இரண்டு வகையான உந்துதல்களையும் சமநிலைப்படுத்துவது முக்கியம். ஆரம்பத்தில் வெளி உந்துதல் குழந்தைகளைக் கற்றலில் ஈடுபடுத்த உதவுகிறது. பின்னர் அவர்களின் ஆர்வம் அதிகரித்ததும் உள் உந்துதல் தானாகவே உருவாகிறது.

## எதிர்கொள்ளும் சவால்கள்

விசேட தேவையுடைய குழந்தைகளுக்கு மன உந்துதல்களை உருவாக்குவது சவாலானது.
அதில் சில முக்கிய சவால்கள்,

**குறைவான தன்னம்பிக்கை:**
பல குழந்தைகள் தங்கள் திறன்களைக் குறைவாக மதிப்பிடுகிறார்கள். இதனால் அவர்கள் புதிய விடயங்களைக் கற்றுக்கொள்ள முயற்சி செய்வதில்லை.

**விரைவான சோர்வு:**
சில குறைபாடுகள் காரணமாக குழந்தைகள் விரைவாகச் சோர்வடைகிறார்கள் அல்லது கவனம் சிதறுகிறார்கள்.

**சமூகத் தடைகள்:**
சமூகத்தில் உள்ள எதிர்மறை மனப்பான்மைகள் அல்லது புறக்கணிப்புகள் குழந்தைகள் தங்கள் சுயமரியாதையை இழக்கச் செய்கின்றன.

**தேவையான வளங்கள் இல்லாமை:**
சிறப்பு ஆசிரியர்கள் சிறப்புப் பாடத்திட்டங்கள் அல்லது கற்றல் உபகரணங்கள் இல்லாதது கற்றல் செயல்முறையைத் தடுக்கிறது.

## எதிர்நோக்கும் தாக்கங்கள்

உளவியல் உந்துதல்கள் விசேட தேவையுடைய குழந்தைகளின் வாழ்க்கையில் பல்வேறு விதமான தாக்கங்களை ஏற்படுத்துகின்றன.

### கல்விசார்ந்த தாக்கம்

**மெதுவான கற்றல் செயல்முறை:**
உந்துதல் இல்லாத குழந்தைகள் மெதுவாகக் கற்பார்கள். இது அவர்களின் கல்வி வளர்ச்சிக்குத் தடையாக அமையும்.

**குறைந்த செயல்திறன்:**
மன உந்துதல் இல்லாததால் குழந்தைகள் தங்கள் முழுத் திறனை வெளிப்படுத்த மாட்டார்கள். பாடசாலைக்குச் செல்வதில் ஆர்வம்

**இல்லாமை:**
மன உந்துதல் இல்லாத குழந்தைகள் பள்ளிக்குச் செல்வதில் ஆர்வம் காட்ட மாட்டார்கள். இதனால் அவர்கள் அடிக்கடி பள்ளியைத் தவிர்க்கிறார்கள்.

### சமூக மற்றும் உணர்ச்சிசார் தாக்கம்

**குறைந்த தன்னம்பிக்கை:**
தொடர் தோல்விகளும் உந்துதல் இல்லாததும் குழந்தைகளின் தன்னம்பிக்கையைக் குறைக்கும்.

**சமூகப் புறக்கணிப்பு:** மற்றவர்களுடன் பழகும் ஆர்வம் இல்லாததால் அவர்கள் சமூகப் புறக்கணிப்பை உணர்வார்கள்.

**உணர்ச்சிசார் பிரச்சினைகள்:**
மன உந்துதல் இல்லாதது மன அழுத்தம் பதற்றம் போன்ற உணர்ச்சிசார் பிரச்சினைகளுக்கு வழிவகுக்கும்.
குடும்பத்தில் தாக்கம்:

**பெற்றோரின் மன அழுத்தம்:**
குழந்தையின் கற்றல் சவால்கள் பெற்றோர்களுக்கு மன அழுத்தத்தையும் கவலையையும் ஏற்படுத்தும்.

**குடும்ப உறவுகளில் பிளவு:**
குழந்தையின் தேவைகளைச் சமாளிப்பதில் உள்ள சிரமங்கள் குடும்ப உறவுகளில் பிளவை ஏற்படுத்தும்.

### கையாளும் வழிமுறைகள்

விசேட தேவையுடைய குழந்தைகளில் மன உந்துதல்களை வளர்க்கப் பல வழிகள் உள்ளன.

**தனிப்பயனாக்கப்பட்ட கற்றல் திட்டம்:**
ஒவ்வொரு குழந்தையின் தேவைகளுக்கும் ஏற்றவாறு தனிப்பயனாக்கப்பட்ட கற்றல் திட்டங்களை உருவாக்க வேண்டும்.

**சரியான வெகுமதிகள்:**
இலக்குகளை அடைந்தவுடன் குழந்தைகளைப் பாராட்டுவதும் சிறிய வெகுமதிகளை அளிப்பதும் அவர்களின் உந்துதலை அதிகரிக்கும்.

**சரியான இலக்குகளை நிர்ணயித்தல்:**
குழந்தைகளால் அடையக்கூடிய சிறிய இலக்குகளை நிர்ணயிக்க வேண்டும். இதன் மூலம் அவர்கள் வெற்றியை உணர்ந்து மேலும் உற்சாகத்துடன் கற்பார்கள்.

**நேர்மறைச் சூழலை உருவாக்குதல்:**
பள்ளியிலும் வீட்டிலும் ஒரு நேர்மறையான ஆதரவான சூழலை உருவாக்குவது மிகவும் முக்கியம்.

**சமூக ஆதரவு:**
சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தி இந்த குழந்தைகளை ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மையை வளர்க்க வேண்டும்.

சிறப்புப் பயிற்சியளிக்கப்பட்ட **ஆசிரியர்கள்:**

குழந்தைகளுக்குப் பொருத்தமான ஆதரவு வழிகாட்டலையும் வழங்க சிறப்புப் பயிற்சியளிக்கப்பட்ட ஆசிரியர்கள் தேவை. உளவியல் உந்துதல்கள் விசேட தேவையுடைய குழந்தைகளின் வாழ்க்கையில் ஒரு முக்கியமான பங்கை வகிக்கின்றன. சரியான அணுகுமுறைகள், ஆதரவான சூழல் மற்றும் பொறுமையான வழிகாட்டுதலுடன் இந்த குழந்தைகள் தங்கள் முழுத் திறனையும் உணர்ந்து, வெற்றிகரமாக வாழ முடியும். ஆசிரியர்கள், பெற்றோர்கள், மற்றும் சமூகம் அனைவரும் இணைந்து இந்த குழந்தைகளுக்கு மன உந்துதலை அளித்து அவர்களை ஊக்குவிக்க வேண்டும். இதன் மூலம் அவர்கள் சிறப்பான எதிர்காலத்தை அடைய முடியும்.

வொஷிங்டன்

இந்தியா – பாக் மோதலின்போது

# “7 ஜெட் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன”

## ஜனாதிபதி ட்ரம்ப் பேச்சால் சர்ச்சை



கடந்த மே மாதத்தில் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலின்போது, 7 ஜெட் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கூறிய கருத்து சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் பயங்கரவாத தளங்களை குறிவைத்து நடத்தப்பட்ட இராணுவ நடவடிக்கையான ஆபரேஷன் சிந்தூரின் போது, இந்தியா ஐந்து பாகிஸ்தான் போர் விமானங்களை சுட்டு வீழ்த்தியதாக விமானப்படை தளபதி அமர் ப்ரீத் சிங் சில வாரங்களுக்கு முன்பு தெரிவித்தார். ஐந்து ஜெட் விமானங்களைத் தவிர, ஒரு பெரிய வான்வழி முன்னெச்சரிக்கை மற்றும் கட்டுப்பாடு விமானமும் அழிக்கப்பட்டதாக அவர் கூறியிருந்தார்.

இந்த நிலையில் திங்கட்கிழமை(25) அன்று வொஷிங்டன்னில் பேசிய அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், “இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் போர் நிறுத்தத்தை ஏற்படுத்தி அணு ஆயுதப் போரை தடுத்தேன். இரு நாடுகளுக்கும் இடையிலான மோதல் அணு ஆயுதப் போராக மாறக்கூடிய கட்டத்தில் இருந்தது. அவர்கள் ஏற்கனவே 7 ஜெட் விமானங்களை சுட்டு வீழ்த்தினர், நிலைமை தீவிரமாக இருந்தது.

அப்போது நான் சொன்னேன், “நீங்கள் வர்த்தகம் செய்ய விரும்புகிறீர்களா? நீங்கள் தொடர்ந்து சண்டையிட்டால் நாங்கள் உங்களுடன் எந்த வர்த்தகமும் செய்யமாட்டோம். எனவே போரை நிறுத்த 24 மணிநேரம் தருகிறேன்’ என்றேன். அவர்கள் இனி போர் நடக்காது என்றார்கள்” என்றார். தற்போது ட்ரம்ப் 7 ஜெட் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டதாக கூறியுள்ளார். ஆனால், எந்த நாடு எத்தனை விமானங்களை சுட்டு வீழ்த்தியது என்ற விவரத்தை தெரிவிக்கவில்லை.

ஜெருசலேம்

# “எங்கள் போர் ஹமாஸுடன் மட்டுமே”

“எங்கள் போர் ஹமாஸ் அமைப்பினருடன் தான்” என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

காசாவின் முக்கிய மருத்துவமனை மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் செய்தியாளர்கள் உட்பட 21 பேர் உயிரிழந்துள்ளனர். பத்திரிகையாளர்கள், மருத்துவ பணியாளர்கள் உயிரிழப்பிற்கு இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு இரங்கல் தெரிவித்தார்.

மேலும், கருத்து தெரிவித்துள்ள பெஞ்சமின் நெதன்யாகு வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது, காசாவில் உள்ள மருத்துவமனையில் இன்று நடந்த துயர சம்பவத்திற்கு இஸ்ரேல் ஆழ்ந்த வருத்தம் தெரிவிக்கிறது.

பத்திரிகையாளர்கள், மருத்துவ ஊழியர்கள் மற்றும் அனைத்து பொதுமக்களின் பணியையும் இஸ்ரேல் மதிக்கிறது. இராணுவ அதிகாரிகள் முழுமையான விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

எங்கள் போர் ஹமாஸ் பயங்கரவாதிகளுடன் தான். எங்கள் இலக்குகள் ஹமாஸை தோற்கடித்து எங்கள் பிணைக் கைதிகளை வீட்டிற்கு அழைத்து வர வேண்டும் என கூறியுள்ளார்.



வொஷிங்டன்




# இந்தியப் பொருட்களுக்கு இனறு முதல் 50% வரி அமுல்

இந்தியப் பொருட்களுக்கு 50% வரியை இன்று புதன்கிழமை (27) முதல் அமுலாக உள்ளமைக்கான வரைவு அறிவிப்பை அமெரிக்கா வெளியிட்டுள்ளது.

வாஷிங்டன்: அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் இந்தியப் பொருட்களுக்கான வரிகளை 50% ஆக உயர்த்துவதாக அறிவித்ததைத் தொடர்ந்து, இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு கூடுதல் வரிகளை அமல்படுத்துவதற்கான வரைவு அறிவிப்பை அமெரிக்க சுங்கம் மற்றும் எல்லைப் பாதுகாப்புத் துறை வெளியிட்டுள்ளது.

50 சதவீத வரிவிதிப்பு குறித்து வெளியாகியுள்ள அறிவிப்பின்படி, ஒகஸ்ட் 6, 2025 அன்று “ரஷ்யவால் அமெரிக்காவுக்கு ஏற்படும் அச்சுறுத்தல்களை நிவர்த்தி செய்தல்” என்ற தலைப்பில் ஜனாதிபதி ட்ரம்ப் வெளியிட்ட நிர்வாக ஆணை 14329ஐ அமல்படுத்தும் வகையில் கூடுதல் வரிகள் விதிக்கப்படுகின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த உத்தரவில், இந்தியப் பொருட்களின் இறக்குமதிக்கான புதிய வரி விகிதம் பற்றி விளக்கமாக குறிப்பிட்டுள்ளது.

இன்று புதன்கிழமை(27) முதல் அமுலாக உள்ள இந்த வரைவு அறிவிப்பில், நிர்வாக உத்தரவுக்கு ஏற்ப அமெரிக்காவின் இணக்கமான கட்டண அட்டவணையை (HTSUS) மாற்றியமைக்க உள்நாட்டுப் பாதுகாப்புச் செயலாளர் முடிவு செய்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. புதிய வரிகள் இன்று புதன்கிழமை (27) நள்ளிரவு 12.01 மணி முதல் அமலுக்கு வரும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதுடெல்லி

‘வந்தாரா’ விவகாரம்:

# முகேஷ் அம்பானியின் மகனுக்கு சிக்கல்

இந்திய தொழிலதிபர் முகேஷ் அம்பானியின் மகன் ஆனந்த் அம்பானி தலைமையில் ரிலையன்ஸ் அறக்கட்டளையின் ‘வந்தாரா’ விலங்கு மீட்பு மற்றும் மறுவாழ்வு மையம் செயல்பட்டு வருகிறது.

இந்த மையம் குஜராத்தின் ரிலையன்ஸ் ஜாம்நகர் வளாகத்தில் 3,000 ஏக்கர் பரப்பளவில் பறந்து விரிந்துள்ளது. 2024இல் பிரதமர் மோடி இந்த மையத்தை திறந்து வைத்தார். இதுவே உலகின் மிகப்பெரிய தனியார் உயிரியல் பூங்கா என கருதப்படுகிறது.

இங்கு சிங்கங்கள், சிறுத்தைகள், யானைகள், காண்டாமிருகங்கள் மற்றும் முதலைகள் என 43 வகையான இனத்தைச் சேர்ந்த 2,000க்கும் மேற்பட்ட வனவிலங்குகள் உள்ளது.

இங்குள்ள விலங்குகள் குறிப்பாக யானைகள் சட்டவிரோதமாக உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் இருந்து கடத்திக் கொண்டுவரப்பட்டவை என்று பரவலாக குற்றசாட்டு எழுந்தது. விலங்குகள் நல அமைப்புகள், ஆர்வலர்கள் தரப்பில் இந்த குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

இதுதொடர்பாக வழக்கறிஞர் சி.ஆர்.ஜெயா சுகின் உச்சநீதிமன்றத்தில் பொதுநல மனு தாக்கல் செய்தார். மனுவில் வந்தாரா மையத்தின் செயல்பாடுகள் குறித்து சுகின் பல குற்றச்சாட்டுகளை முன்வைத்திருந்தார்.



இந்த மனுவை விசாரித்த நீதிபதிகள் பங்கஜ் மிதல் மற்றும் பிரசன்னா பி.வரலே ஆகியோர் அடங்கிய அமர்வு திங்கட்கிழமை(25) அன்று விசாரித்தது.

இந்நிலையில், யானைகளை சட்டவிரோதமாக சிறைபிடித்தது மற்றும் பிற குற்றச்சாட்டுகளை விசாரிக்க ஓய்வுபெற்ற நீதிபதி ஜே. செலமேஸ்வர் தலைமையில் ஒரு சிறப்பு விசாரணைக் குழுவை (SIT) அமைக்க உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த சிறப்பு விசாரணைக் குழுவிற்கு முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதி ஜே.செல்லமேஸ்வர் தலைமை தாங்குவார்.

செப்டம்பர் 12 ஆம் திகதிக்குள் SIT தனது அறிக்கையை சமர்ப்பிக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இங்கிலாந்து பிறீமியர் லீக்:

# நியூகாசிலை வென்றது லிவர்பூல்

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், நியூகாசில் யுனைட்டெட்டின் மைதானத்தில் செவ்வாய்க்கிழமை (26) அதிகாலை நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 3-2 என்ற கோல் கணக்கில் லிவர்பூல் வென்றது.

லிவர்பூல் சார்பாக றயான் கிரெவென்பேர்ச்ம் ஹியூகோ எகிடிகே, றியோ எங்குமோஹா ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

நியூகாசில் சார்பாக ப்ரூனோ குய்மரஸ், வில்லியம் ஒஸுலா ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.




ஐ. அமெரிக்க பகிரங்க டென்னிஸ் தொடரிலிருந்து

## கீஸ் வெளியேற்றம்

ஐக்கிய அமெரிக்க பகிரங்க டென்னிஸ் தொடரிலிருந்து உலகின் ஆறாம் நிலை வீராங்கனையான மடிஸன் கீஸ் வெளியேற்றப்பட்டுள்ளார்.

திங்கட்கிழமை (25) அன்று நடைபெற்ற தனது முதலாவது சுற்றுப் போட்டியில் மெக்ஸிக்கோவின் றெனடா ஸரஸுவாவை எதிர்கொண்ட ஐக்கிய அமெரிக்காவின் கீஸ், 7-6 (12-10), 6-7 (3-7), 5-7 என்ற செட் கணக்கில் தோல்வியடைந்தே தொடரிலிருந்து வெளியேறினார்.



## கல்முனை சாஹிரா மைதான அபிவிருத்திப் பணிகள் ஆரம்பம்



எம்.எஸ்.எம்.ஸாகிர்

கிழக்கு மாகாண விளையாட்டு அமைச்சால் கல்முனை சாஹிரா தேசிய பாடசாலையின் மைதான மேம்பாட்டுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 25 இலட்சம் ரூபாய் நிதியின் மூலம் மேற்கொள்ளவிருக்கும் பாடசாலையின் மைதானத்தைச் சுற்றியுள்ள வடிகான்களை மீள் நிர்மாணம் செய்தல் மற்றும் மைதானத்திற்கு மண் இட்டு நிரப்பும் வேலைத்திட்டமானது திங்கட்கிழமை (25) அன்று உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

முதுகுப் பகுதி உபாதையால்

## 3 மாதங்களுக்கு ஓ ரூர்க் இல்லை

முதுகுப் பகுதி உபாதை காரணமாக குறைந்தது மூன்று மாதங்களுக்கு நியூசிலாந்தின் வேகப்பந்துவீச்சாளர் வில் ஓ ரூர்க் விளையாட முடியாது.

இதேவேளை வலது காலில் ஏற்பட்ட முறிவு காரணமாக துடுப்பாட்டவீரர் பின் அலென்னும் மூன்று மாதங்களுக்கு விளையாட முடியாது.

இந்நிலையில் அடிவயிற்றுப் பகுதி உபாதை காரணமாக சகலதுறைவீரர் கிளென் பிலிப்ஸ் அவுஸ்திரேலியாவுக்கெதிரான இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டித் தொடரை தவறவிடவுள்ளார்.

இதேவேளை, அடிவயிற்று சத்திரசிகிச்சையை மேற்கொண்ட மிற்செல் சான்ட்னெரும் அவுஸ்திரேலியாவுக்கெதிரான தொடரில் பங்கேற்பது சந்தேகத்துக்கிடமானதாகக் காணப்ப டுகிறது.




இலங்கைக்கு எதிரான தொடருக்கான

## சிம்பாப்வேக் குழாமில் பிரெண்டன் டெய்லர்

இலங்கைக்கு எதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடருக்கான சிம்பாப்வேக் குழாமில் பிரெண்டன் டெய்லர் இடம்பெற்றுள்ளார்.

குழாம்:
கிறேய்க் எர்வின் (அணித்தலைவர்), பிரயன் பென்னிட், ஜொனதன் கம்பெல், பென் கர்ரன், ட்ரெவர் குவான்டு, வெஸ்லி மட்ஹெவெரே, கிளைவ்ப் மடன்டே, எர்னெஸ்ட் மஸுகு, டொனி முன்யொங்கா, பிளஸிங்க் முஸர்பனி, றிச்சர்ட் நகரவா, நியூமன் நயம்ஹுரி, சிகண்டர் ராசா, பிரெண்டன் டெய்லர், ஷோன் வில்லியம்ஸ்.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை 27, ஒகஸ்ட் 2025, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.